# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.116/2024**

Deposition of Witness of PW4

| | | | |
|---|---|---|---|
| Name | : மதியரசு | Calling | : |
| Father/Husband's Name | : சண்முகம் | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 30th October 2025.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தீரன்நகரில் குடியிருந்து கொண்டு மணல் புரோக்கராக வருகிறேன். கடந்த 17.03.2022ம் தேதி மாலை 4.00 மணியளவில் ஒரு பெண்மணி ஐய்யோ ஐய்யோ என்று சத்தம் போட்டார். நான் போய் பார்த்தேன். அவர் கழுத்தில் இருந்த செயினை யாரோ பிடிங்கி சென்றதாக சொன்னார். இந்த வழக்கு சம்பந்தமாக மொடக்குறிச்சி போலீஸார் இரவு 8.15 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து எழுதினார்கள். அதில் நானும் எனது மகனும் கையொழுத்து செய்தோம். என்னிடம் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

## எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் கையெழுத்து போட்ட ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் என் மகன் படித்து சொன்னார் நான் கையெழுத்து செய்தேன். நான் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல, என் வீட்டில் வைத்து கையெழுத்து செய்தேன். ஒரு கையெழுத்து தான் செய்தேன். நான் சொன்ன மாதிரி

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.30 17:40:01 +0530

சொன்ன இடத்தில் கையெழுத்து செய்யாமல் போலீஸார் கேட்டுக் கொண்டதற்கு இனங்க காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.30 17:40:07 +0530